முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2026 சனவரி

## (103) பொருளியல்

(Economics)

2026-01-24
பிற்பகல்
[2.00 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***வரைபுத் தாள்கள்*** *வழங்கப்படும்.*

(7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக..*

**1.1** பின்வருவனவற்றில் நுண்பாகப் பொருளியல் தொடர்பில் சரியான கூற்று எது?

(1) இது பொருளாதார வளர்ச்சி பற்றி ஆய்வு செய்கிறது.

(2) இது பரிமாற்ற வீதம் மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் பற்றி ஆய்வு செய்கிறது.


(3) இது நுகர்வோரின் நடத்தை பற்றி ஆய்வு செய்கிறது.

(4) இது மொத்த வருமானம் மற்றும் செலவுகள் பற்றி ஆய்வு செய்கிறது.

**1.2** பின்வருவனவற்றில் தொழில்முனைவுக்கான வெகுமதியாக இருப்பது எது?

(1) இலாபம் (2) வட்டி (3) கூலிகள் (4) வாடகை.

**1.3** கீழுள்ள வரிப்படம் பண்டமொன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது :




உற்பத்தியாளர் மிகை :

(1) ரூ. 1,800/- (2) ரூ. 3,600/- (3) ரூ. 4,800/- (4) ரூ. 3,000/-

**1.4** ஒரு தனி விற்பனையாளர் மாத்திரம் உள்ள சந்தைக் கட்டமைப்பானது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) சிலருரிமை (2) தனியுரிமை

(3) நிறை போட்டி (4) தனியுரிமைப் போட்டி.

**1.5** கீழ்வருவனவற்றில் உற்பத்திச் சாத்திய வளையியின் ஓர் எடுகோளாக இருப்பது எது?

(1) எத்தனை பொருள்களை வேண்டுமானாலும் உற்பத்தி செய்யலாம்.

(2) பரிசீலனையின் கீழுள்ள காலப்பகுதியில் கிடைக்கக்கூடிய வளங்களின் அளவு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

(3) தொழினுட்பமானது தேவைக்கேற்ப மாற்றப்படலாம்.

(4) கிடைக்கக்கூடிய வளங்கள் மாற்றப்பட வேண்டும்.

**1.6** கீழ்வருவனவற்றில் திட்டமிடப்பட்ட (கட்டளை) பொருளாதார முறைமை ஒன்றின் பண்பாக (characteristic) **அமையாதது** எது?

(1) நியாயமான வருமானப் பகிர்வு இருத்தல்.

(2) அரச தொழில்முனைவு முறைமை இருத்தல்.

(3) நுகர்வோர் இறையாண்மை இருத்தல்.

(4) தெரிவுச் சுதந்திரம் இல்லாமை.

**1.7** கீழ்வருவனவற்றில் சமபயன் வளையி தொடர்பான சரியான கூற்று **அல்லாதது** எது?

(1) சமபயன் வளையி என்பது இரண்டு பொருள்களின் வெவ்வேறு சேர்க்கைகளின் ஒரு வரைபு ஆகும்.

(2) ஒரு சமபயன் வளையி இடமிருந்து வலமாகக் கீழ்நோக்கிச் சாய்கிறது.

(3) ஒரு சமபயன் வளையி இரண்டிற்கும் மேற்பட்ட பொருள்களின் கணியங்களைக் காட்டுகிறது.

(4) இரண்டு சமபயன் வளையிகள் ஒன்றையொன்று இடைவெட்டுவதில்லை.

**1.8** கீழ்வருவனவற்றில் கேள்வியை நிர்ணயிப்பது எது?

(1) நிரப்புப் பொருள்களின் விலைகள்  (2) நுகர்வோரின் வருமானம்.

(3) பிரதியீட்டுப் பொருள்களின் விலைகள்  (4) மேற்கூறிய யாவும்.

**1.9** நுகர்வோர் வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பின் விளைவாக கேள்வி வளையியில் ஏற்படும் தாக்கம் தொடர்பில் கீழ்வருவனவற்றில் சரியான கூற்று எது?

(1) கேள்வி வளையி வலப்பக்கமாக நகரும்.

(2) கேள்வி வளையி இடப்பக்கமாக நகரும்.

(3) கேள்வி வளையியுடனான கீழ்நோக்கிய நகர்வு.

(4) கேள்வி வளையியுடனான மேல்நோக்கிய நகர்வு.

**1.10** 2024 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்தப் பொருளாதார மீளாய்வுக்கு இணங்க, 2024 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் தலா வருமானம் :

(1) US $ 3,801.  (2) US $ 4,516.  (3) US $ 3,851.  (4) US $ 3,999.

*இல. **1.11** மற்றும் **1.12** ஆகிய வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** ................. (அருமை/ சந்தர்ப்பச் செலவு) என்பது ஒரு குறிப்பிட்ட தீர்மானத்தைத் தெரிவு செய்வதில் தவிர்க்கப்பட்ட அடுத்த சிறந்த மாற்றுத் தெரிவின் பெறுமதி ஆகும்.

**1.12** எல்லை உற்பத்தி (MP) வளையியானது சராசரி உற்பத்தி (AP) வளையியை ................. சராசரி உற்பத்தி வளையியின் (உயர்ந்தபட்ச / குறைந்தபட்ச) புள்ளியில் இடைவெட்டுகிறது.

*கீழே **1.13** மற்றும் **1.14** இல் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் எழுதுக*

**1.13** உற்பத்தியின் உகந்த மட்டத்தில், எல்லை வருமானம் எல்லைக் கிரயத்திற்குச் சமனாகும்.

**1.14** தனியுரிமைப் போட்டியில், குறுங்கால ஓட்டத்தில் மாத்திரம் நிறுவனங்கள் சாதாரண இலாபங்களை ஈட்டுகின்றன.

***1.15** தொடக்கம் **1.20** வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.15** பொருளாதாரப் பண்டங்களின் இரண்டு (02) பண்புகளைக் (characteristics) குறிப்பிடுக.

**1.16** "கேள்வி இழுப்புப் பணவீக்கம்" என்பதால் யாது கருதப்படுகிறது எனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.17** பணத்திற்கான தேவைக்கான இரண்டு 02) நோக்கங்களைக் (motives) குறிப்பிடுக.

**1.18** மொத்தப் பயன் மற்றும் எல்லைப் பயன் ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

**1.19** மனித அபிவிருத்தியின் சுயவிபரத்தில் (profile) உள்ள இரண்டு (02) மூலகங்களைக் (elements) குறிப்பிடுக.

**1.20** இலங்கைப் பொருளாதாரத்தில் உள்ள இரண்டு (02) அண்மைய பொருளாதாரப் போக்குகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) (i) நான்கு (04) உற்பத்திக் காரணிகளைக் (பொருளாதார வளங்களைக்) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(ii) சந்தர்ப்பச் செலவு பூச்சியமாகவுள்ள இரண்டு (02) சந்தர்ப்பங்களைக் (instances) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) பண்டமொன்று தொடர்பில் தரப்பட்டுள்ள கீழ்வரும் கேள்விச் சார்பு (Qd) மற்றும் நிரம்பல் (Qs) சார்பு ஆகியவற்றைக் கவனத்திற் கொள்க :

$$Q_d = 200 - 10p$$

$$Q_s = 40 + 30p$$

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

பண்டத்தின் சந்தைச் சமநிலை விலை மற்றும் கணியத்தைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் மூன்றைக் (03) **குறிப்பிடுக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

(a) அரசாங்கத்தால் பண்டமொன்றிற்கான அலகு வரியை விதிப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளை (consequences) ஒரு வரைபைப் பயன்படுத்தி **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) உற்பத்திச் செயன்முறை ஒன்றில் நீண்டகால ஓட்டத்தின் இரண்டு (02) பண்புகளைக் (characteristics) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) சிலருரிமைச் (oligopoly) சந்தை ஒன்றின் மூன்று (03) பண்புகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) வர்த்தக வங்கியொன்றின் மூன்று (03) தொழிற்பாடுகளைக் (functions) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) விலை மட்டத்திற்கும் வட்டி வீதத்திற்கும் இடையிலான தொடர்பை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) இலங்கை மத்திய வங்கியால் பயன்படுத்தப்படும் இரண்டு (02) பண்புசார் நாணயக் கொள்கைச் சாதனங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) **அவுஸ்திரேலியாவும் பிரேசிலும் சீனி** மற்றும் **கோதுமை** ஆகிய இரண்டையும் உற்பத்தி செய்கின்றன. கீழ்வரும் அட்டவணையானது இரு நாடுகளினதும் ஓர் அலகுக் கூலியினால் உற்பத்தி செய்யப்படக்கூடிய **சீனி** மற்றும் **கோதுமையின்** கிலோகிராம் அளவுகளைக் காட்டுகின்றன :

| பொருள் / நாடு | சீனி (kg இல்) | கோதுமை (kg இல்) |
|---|---|---|
| அவுஸ்திரேலியா | 12 | 6 |
| பிரேசில் | 3 | 6 |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

எந்த நாடு ஒவ்வொரு பொருளினது உற்பத்தியிலும் ஒப்பீட்டு நயத்தைக் கொண்டிருக்கிறது என்பதை **அடையாளங் காண்க** (உங்களது விடைக்கு ஆதரவான கணிப்பீடுகளைத் தருக). (04 புள்ளிகள்)

(b) "நெகிழ்வான பரிமாற்ற வீதம்" மற்றும் "நிலையான பரிமாற்ற வீதம்" ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) அமெரிக்க டொலருக்கு ($) எதிராக இலங்கை ரூபாயின் தேய்வைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) நடவடிக்கைகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

(A) மூன்று (03) பேரினப் பொருளாதார நோக்கங்களைக் (Objectives) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(B) தேசிய வருமானக் கணக்கீட்டின் மூன்று (03) வெவ்வேறு அணுகுமுறைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(C) பொருளாதாரமொன்றின் ஒரு வருட காலப்பகுதிக்கான தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய கீழ்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | **ரூபா மில்லியன்** |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவினம் | 6,000 |
| அரசாங்க நுகர்வுச் செலவினம் | 5,500 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 2,500 |
| இருப்பிலுள்ள மாற்றங்கள் | 500 |
| பெறுமதிகளிலுள்ள மாற்றங்கள் | 200 |
| பொருள்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிகள் | 6,500 |
| பொருள்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகள் | 15,000 |
| வெளிநாட்டிலிருந்தான நிகரக் காரணி வருமானம் (வெளிநாட்டு நிகர முதன்மை வருமானம்) | 1,500 |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(a) மொத்த உள்நாட்டுச் செலவினம் (GDE) – சந்தை விலையில். (06 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில். (02 புள்ளிகள்)

(c) நிகர தேசிய உற்பத்தி (NNP) – சந்தை விலையில். (02 புள்ளிகள்)

(D) தேசிய வருமானக் கணக்கீட்டில் உள்ள "அடிப்படை விலை" என்பதாற் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(E) நேர் வரி மற்றும் நேரில் வரி ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |